232916

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1991 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*[1991, ஆகஸ்ட் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

*1991, ஆகஸ்ட் மாதம் 16 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : ரூபா 1.0

202916

# 1991 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

[1991, ஆகஸ்ட் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 1/90

26-11-1991 SRI LANKA

தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1991 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வருந் தேதியும்.

2. தண்டனைச்சட்டக்கோவையின் 2ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:— 19ஆம் அத்தியாயத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவை அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவென மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:—

"(2) (அ) இலங்கைக் குடியரசுக்கு வெளியே அமைந்துள்ள ஓர் இலங்கைத் தூதராலயத்தின் வளவுகளுக்குள் அல்லது அத்தகைய தூதராலயத் தலைவரின், தூதாண்மை முகவரின் அல்லது அத்தகைய தூதராலயத்தின் வேறு எவரேனும் உறுப்பினரின் வதிவிட வளவுகளுக்குள்; அல்லது

(ஆ) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பாட்சி கொள்ளப்பட்டதும் அல்லது இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள ஏதேனும் நியதிச்சட்ட முறையான குழுவின் சார்பில் அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பாட்சி கொள்ளப்பட்டதும் இலங்கைக் குடியரசுக்கு வெளியே அமைந்துள்ளதுமான எவையேனும் வளவுகளுக்குள்; அல்லது

(இ) இலங்கைக் குடியரசுக்கு வெளியே, அத்தகைய செயல் அல்லது செய்யாமை தொடர்பில் அத்தகைய அரசில் அவருடைய தூதாண்மை நிலை காரணமாக ஒரு வெளிநாட்டு அரசால் வழங்கப்பட்ட தூதாண்மைப் பாதிப்பின்மையை அத்தகைய இலங்கை நாட்டினத்தவர் அனுபவிக்கும்போது;

அவர் எந்தச் செயலுக்கு அல்லது செய்யாமைக்குக் குற்றவாளியாகவுள்ளாரோ அந்தச் செயல் அல்லது செய்யாமை புரியப்பட்டவிடத்து, அச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாகப் புரியப்பட்ட ஒவ்வொரு செயலுக்கும் அல்லது செய்யாமைக்கும் அச்சட்டக்கோவையின் கீழ் ஒவ்வோர் இலங்கை நாட்டினத்தவரும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

2—ட 012988—1,190 (04/91)

(3) இப்பிரிவிலுள்ளது எதுவும், எந்நாட்டில் அத்தகைய செயல் அல்லது செய்யாமை புரியப்பட்டதோ அந்த நாட்டின் சட்டங்களின்கீழ், அத்தகைய செயல் அல்லது செய்யாமை தொடர்பில் எவரேனும் இலங்கை நாட்டினத்தவரின் பொறுப்பினைப் பாதிப்பதாகப் பொருள்கொள்ளலாகாது." அத்துடன்,

(3) அப்பிரிவின் ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும்:—

"இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் செய்யப்படும் தவறுகளுக்கான பொறுப்பு."

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(3) இப்பிரிவிலுள்ளது எதுவும், எந்நாட்டில் அத்தகைய செயல் அல்லது செய்யாமை புரியப்பட்டதோ அந்த நாட்டின் சட்டங்களின்கீழ், அத்தகைய செயல் அல்லது செய்யாமை தொடர்பில் எவரேனும் இலங்கை நாட்டினத்தவரின் பொறுப்பினைப் பாதிப்பதாகப் பொருள்கொள்ளலாகாது." அத்துடன்,

(3) அப்பிரிவின் ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக் குறிப்பை இடுவதன் மூலமும்:—

"இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் செய்யப்படும் தவறுகளுக்கான பொறுப்பு."

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.